தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.
தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 12.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA- 12230/A/2024

திருமதி.C.செல்லம்மாள் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்– 636 001. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 12.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி.C.செல்லம்மாள், அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.கணேசன், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் 05.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கோரியுள்ள தகவல்களை 05.11.2026 நாளன்று பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் அவர்களிடமிருந்து முழுதிருப்தியுடன் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை

ஆணையத்தில் சமர்ப்பித்தார். அக்கடிதத்தின் அடிப்படையில், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண் SA- 12330/A/2024</u>

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்– 636 001.

<u>மனுதாரர்:</u>
திருமதி. C.செல்லம்மாள்,
28, கோம்பூரான் காடு,
கருப்புரெட்டியூர் அஞ்சல்,
மேட்டூர்அணை,
சேலம் – 636 404.

Copy to File
Je/PA 02.11.2026